www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பதிவெண் :

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022

**11-ம் வகுப்பு** **பொருளியல்** மதிப்பெண்கள் : 90
நேரம் ; 3.00 மணி

## பகுதி - அ

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்; 20x1=20

1. நுண்ணியல் பொருளியல் எதை உள்ளடக்கியது?
அ) ஒட்டு மொத்தப் பொருளாதாரம் ஆ) பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள்
இ) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள் ஈ) ஒட்டு மொத்த பொருளாதாரத்த தொடர்பு
2. நாடுகளின் செல்வம் மற்றும் காரணங்களைக் குறித்த ஒருவிசாரணை என்ற நூலின்ஆசிரியர்
அ) ஆல்ஃபிரட்மார்ஷல் ஆ) ஆடம்ஸ்மித் இ)இலயன்ஸ்ராபின்ஸ் ஈ) பால் அசாமுவேல்சன்
3. விற்பனை செய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய்கிடைக்கும்?
அ) விலை ஆ) மொத்தச்செலவு இ) இறுதி சமநிலை வருவாய் ஈ) இறுதி சமநிலைச் செலவு
4. தகுவிலை ரூ.250 ஆகவும் மற்றும் உண்மைவிலை ரூ. 200 ஆகவும் உள்ளது. நுகர்வோர் எச்சத்தைக் காண்க. அ) 375 ஆ) 175 இ) 200 ஈ) 50
5. கீழ்க்காணும் எவற்றால் தேவை அதிகரிக்கும்.
அ) வரி அதிகரிப்பதால் ஆ) அதிக மானியம் வழங்குவதால்
இ) வட்டி வீதம் அதிகரிப்பதால் ஈ) மக்கள் தொகை குறைவதால்
6. ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பைத் தருவது எது? அ) நுகர்வுசார்பு ஆ) உற்பத்திசார்பு இ) சேமிப்புசார்பு ஈ) முதலீட்டுசார்பு
7. கீழ்கண்டவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல? அ) குறை அளிப்பு
ஆ) இயங்கும் தன்மையுடையது இ) பலவகைப்படும் ஈ) இயற்கையின் கொடை
8. பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ளதொடர்பு
அ) எதிர்மறை ஆ) நேர்மறை இ) பூஜ்யம் ஈ) அதிகரிக்கும்
9. ஓர் அலகுகூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு
அ) மாறும் செலவு ஆ) மாறாச்செலவு இ) இறுதிநிலைச் செலவு ஈ) மொத்தச்செலவு
10. மொத்த மாறாச் செலவு 100, மொத்தமாறும்செலவு 125 எனில் மொத்தச் செலவைக் கணக்கிடுக. அ) 125 ஆ) 175 இ) 225 ஈ) 325
11. எப்போதுநிறுவனம்இலாபம்பெறமுடியும்? அ) TR < TC ஆ)TR - MC இ) TR > TC ஈ) TR = TC
12. எந்தவகை அங்காடியில் போட்டியே இராது?
அ) நிறைவுபோட்டி ஆ) முற்றுரிமை இ) முற்றுரிமை போட்டி ஈ) சில்லோர்முற்றுரிமை
13. விற்பனை செலவிற்கு உதாரணம் அ) கச்சாப்பொருள் விலை ஆ) போக்குவரத்துச் செலவு
இ) விளம்பர செலவு ஈ) கொள்முதல் செலவு
14. எதனைப்பயன்படுத்துவதற்கானவெகுமதியேவாரம்ஆகும்?
அ) மூலதனம் ஆ) உழைப்பாளி இ) நிலம் ஈ) அமைப்பு
15. இலாபம் இதற்கான வெகுமதி ஆகும். அ) நிலம் ஆ) அமைப்பு இ) மூலதனம் ஈ) உழைப்பு
16. கர்நாடகத்தின் முக்கியதங்கச் சுரங்கப் பகுதி அ)கோலார் ஆ) இராமகிரி இ)அனந்தபூர் ஈ) கொச்சின்
17. கலப்புப் பொருளாதாரம் என்பது .... அ) தனியார் துறை மற்றும் வங்கிகள்
ஆ) பொது மற்றும் தனியார் துறைகள் சேர்ந்து செயல்படுவது
இ) பொதுத்து[illegible] மற்றும் வங்கிகள் ஈ) பொதுத்துறைகள் மட்டும்.
18. மக்கள்தொ[illegible]ர்த்தி என்பது
அ) நிலத்தின அளவு / மக்கள் தொகை ஆ) நிலத்தின் அளவு / வேலை வாய்ப்பு
இ) மக்கள்தொகை/ குறிப்பிட்டநில அளவு ஈ) மக்கள்தொகை / வேலைவாய்ப்பு
19. இரயத்வாரி முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம்
அ) கேரளா ஆ) வங்காளம் இ) தமிழ்நாடு ஈ) மகாராஸ்டிரா
20. 2016-ஆம்ஆண்டுக்கானமனிதவளர்ச்சிஅறிக்கையின்படி188 நாடுகளில்இந்தியாவின்தரம்
அ) 130 ஆ) 131 இ) 135 ஈ) 145



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பகுதி -ஆ

II. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினாஎண் 30 -க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 7x2=14

21. நுண்பொருளியல் என்றால் என்ன?
22. பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளைக் கூறுக.
23. உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்து?
24. மாறாச்செலவு என்றால் என்ன?
25. கீழ்க்கண்டநிறுவனத்தின்தேவைகோடுவரைக. அ) நிறைவுபோட்டிஆ) முற்றுரிமை
26. பகிர்வின் வகைகள் யாவை?
27. வட்டிபற்றிநீ அறிவது யாது?
28. முன்னேறிய பொருளாதாரத்தின் இரண்டு இயல்புகளை கூறுக.
29. சுதந்திரம் அடைவதற்குமுன் இந்தியாவில் காணப்பட்டபல் வேறுவகையான நிலஉடைமை முறைகள் யாவை?
30. கிஃபன்பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?

பகுதி - இ

III. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40-க்குகட்டாயமாக விடையளிக்கவும் 7x3=21

31. பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?
32. சமநோக்கு வளை கோடுகளின் பண்புகள் யாவை?
33. மொத்த, சராசரி, இறுதிநிலை உற்பத்திகளுக்கு இடையே உள்ள தொடர்பினை விவரி.
34. வாய்ப்புச் செலவை எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.
35. அங்காடியின் இயல்புகள் யாவை?
36. கூலியின் வகைகளைப் பட்டியலிடுக.
37. வாரம் மற்றும் போலிவாரம் :வேறுபடுத்துக
38. கிராமசர்வோதயம் - சிறுகுறிப்புவரைக.
39. ஆங்கிலேயர் காலத்தில் இந்தியக்கை வினைப் பொருட்கள் உற்பத்தி குறைந்தது ஏன்?
40. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தைத் தருக.

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35

41. (அ) பொருளியலைப் பற்றியபல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக. (அல்லது)
(ஆ) உற்பத்தி வாய்ப்புவளை கோட்டைக் கொண்டு, பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை விவரி.
42. (அ) தேவைவிதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி. (அல்லது)
(ஆ) குறைந்துசெல் இறுதி நிலைபயன்பாட்டு விதியைவரை படத்துடன் விவரி.
43. (அ) சமஅளவு உற்பத்தி கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரி. (அல்லது)
(ஆ) அகச்சிக்கனக்ங்ள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரி.
44. (அ) மொத்தச்செலவு = $10+Q^3$, Q = 5 எனில்AC, AVC, TFC, AFC ஆகியவற்றைக் கண்டுபிடி.
(அல்லது) (ஆ) பல்வேறுபட்டவிலை நிலைகளில்AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.
45. (அ) நிறைவுபோட்டியின்இயல்புகள்விளக்குக. (அல்லது)
(ஆ) முற்றுரிமையில் விலை மற்றும் உற்பத்தி அளவைத்தீர் மானிப்பதை விளக்குக.
46. (அ) இறுதிநிலை உற்பத்தித் திறன் பகிர்வுக் கோட்பாட்டை விளக்குக. (அல்லது)
(ஆ) ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக் காட்டுடன் விவரி.
47. (அ) காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக. (அல்லது)
(ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி?

**********



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com